# திராவிடப் போராளிகள்

**28** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# அறிவுச்சுடர் அன்னபூரணி!

ஓவியம் : ரவி பேலட்



*13.11.1932* தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழில் **‘எதிர்ப்புகளை வரவேற்கிறோம்’** என்ற துணை அறிவிப்புடன் வெளியான ஒரு கட்டுரையின் தலைப்பு **‘மண்பூனை எலி பிடிக்குமா?’** என்பது.

அந்தக் கட்டுரையின் முடிவுரையில் “எந்த மதத்திலும் உள்ள தெய்வீக நம்பிக்கையும், அர்த்தமற்ற கட்டுப்பாடுகளும், சடங்காச்சாரங்களும், இன்றைய மக்களுக்கு வயிற்றுக்குச் சோற்றையும், உடுக்க உடையையும், ஒண்டி நிற்க வீட்டையும், நோயற்ற வாழ்வையும் கொடுக்குமாயின், அவற்றில் நம்பிக்கைக் கொண்டு கையாளுவதில் சுயமரியாதை இயக்கத்திற்குத் தண்டா இல்லை.

ஆனால், அறிவிற்குப் பொருந்தாததும், அவசியமற்றதும், வீண்செலவிற்கு வழிவைப்பதும், காலத்தை வீசாக்குவதுமான பழக்கவழக்கங்கள், சட்ட திட்டங்கள் எந்த ஜாதியின் பேராலிருப்பினும், எந்த சமயத்தின் பேராலிருப்பினும், எந்தச் சாமியின் பேராலிருப்பினும், எத்தனை நீண்ட காலப் பழக்கத்திற்குள்ளாய் இருப்பினும், அவை மக்களுக்கு ஒரு சிறிதும், அணுவளவேனும் நன்மை பயக்காதென்பதையும், நன்மைக்கு மாறாகப் பல சங்கடங்களையே நல்குமென்பதையும் உறுதியுடன் கூற சுயமரியாதை இயக்கம் சற்றும் தயங்கவில்லை. இவ்வுண்மையைக் கோபுரத்தின் மீதிருந்தும், ‘சர்ச்சுகள்’, ‘பள்ளிவாசல்கள்’, ‘விகாரங்கள்’ ஆகியவற்றின் உச்சி மீதிருந்தும் உரத்தத் தொனியில் கூறவும், தன் மதிப்பியக்கம் எப்பொழுதும் தயாராயிருக்கிறதென்பதை இக்கோஷ்டியினருக்கு அறிவிக்கிறோம்.

இவ்வித எதிர்ப்புகளெல்லாம் சுயமரியாதை இயக்கத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடலாமென எதிர்பார்ப்பதும் ’மண்பூனை எலி பிடிக்குமென’ எதிர்பார்த்தவன் கதையையே ஒக்கும் என்பதையும் இவ்வைதீகக் கோஷ்டியினரும் இளைஞருலகமும் தீர்க்கமாய் அறிய வேண்டுகிறோம்!”

படிப்பவர் மனதில் ஒரு மின்னல் போல் வியப்பினை ஏற்படுத்தும் இந்தக் கட்டுரையை எழுதியவர் திருமதி ஆர்.அன்னபூரணியம்மாள்

செறிவான சிந்தனைப் போக்கும், எழுத்து வன்மையும், மேடையில் முழங்கும் உரைத் திறனும், கேட்போர் உள்ளத்தைத் தன்வயப்படுத்தும் ஆற்றொழுக்கான தருக்கவியல் அணுகுமுறையும் கொண்ட அன்னபூரணி யார்? இதற்கான விடை நாமறிந்து கொள்ள வேண்டிய இன்னும் சில வரலாற்றுச் செய்திகளையும் சேர்த்தே கொடுக்கிறது.

## அப்பாதுரையாரின் வாரிசு

**‘திராவிடச் சங்கம்’** தொடங்கியவரும் **‘ஒரு பைசா தமிழன்’** இதழை நடத்தியவருமான அயோத்திதாசப் பண்டிதரின் நேரடித் தொண்டரும் தந்தை பெரியாரின் தோழருமான கோலார் தங்கவயல் அப்பாத்துரை எனும் அறிஞரின் மகள்தான் அன்னபூரணி அம்மையார்.

அப்பாத்துரையார் அவர்கள் கோலார் தங்கவயல் பகுதிகளிலும் பெங்களூருவில் ஆதி திராவிடர் அமைப்புகளை வழிநடத்தியவர். பௌத்த சங்கங்களை நிறுவுவதிலும் தீவிரமாகச் செயல்பட்டவர்.

தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளை முன்னெடுத்து நடத்தியவர். அயோத்திதாசர் மறைவுக்குப் பின் ‘தமிழன்’ இதழை மிகப் பெரும் போராட்டங்களுக்கிடையில் தொடர்ந்து நடத்தியவர். அவர் 1961-ஆம் ஆண்டு மறைந்தபோதும், அதன் பின்பு பெங்களூருவில் நடைபெற்ற மாநாட்டில் அப்பாத்துரையாரின் படத்தினைத் திறந்து வைத்தும் புகழுரை ஆற்றினார் தந்தை பெரியார்.

அப்போது, அவர் எழுதிய **‘புத்தரின் அருளறம்’** என்ற நூலை பெரியார் மிகவும் பாராட்டினார்.

அறிவுலகம் மதிக்கும் அறிஞரான அப்பாத்துரையாரின் அன்பு மகள் அன்னபூரணி இளம் வயது முதல் சாதி, தீண்டாமை, பெண்ணடிமை ஆகிய சமூகக் கேடுகளை எதிர்க்க வேண்டும் என்ற உறுதியுடன் வளர்ந்தார். தன் தந்தையின் பொது வாழ்வுக்கும் அவரது எழுத்துப் பணிக்கும் உதவிகளைச் செய்து அக்கொள்கைகளில் முழுமையாக உடன்பட்டுச் செயல்பட்டார். அவரது பெண் விடுதலைச் சிந்தனைக்கும் சமத்துவ உரிமைப் போராட்டத்துக்கும், தருக்கவியல் பகுத்தறிவு ஆய்வுக்கும் முழுமையான வாய்ப்பளித்தது சுயமரியாதை இயக்கம். எனவே, அதில் ஈடுபாடு கொண்டார்.

**கூவி அழைத்தும் விழிக்காத பெண்களைப் பார்த்து உலக வரலாறுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி எழுச்சி பெறச்செய்தார் அன்னபூரணி அம்மையார்.**

## அறைகூவல் எழுத்துகள்!

*24.7.1932* ‘குடிஅரசு’ இதழில் ‘இந்திய சகோதரிகளே இன்னும் உறக்கமா? விழிமின்! எழுமின்!!’ என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் அன்னபூரணி அம்மையாரின் பெண் விடுதலைக் கருத்துகளும், அறிவியல் சிந்தனையும் ஆராய்ச்சிப் பார்வையும், முழுவீச்சுடன் வெளிப்படுவதைக் காண முடியும்.

“எனதன்பார்ந்த இந்தியச் சகோதரிகாள்! பெருந்தூக்கத்தில் அமிழ்ந்து கிடக்கும் அருமைத் தோழிகாள்!!” என்று தொடக்கமே அதிர்ச்சி வைத்தியம்தான். தொடர்வது அறைகூவல்.

“விஞ்ஞான சாஸ்திரமும், அறிவு வளர்ச்சியும், சுதந்திர தாகமும், சமதர்ம வேட்கையும் வீறு கொண்டெழும் இவ்விருபதாம் நூற்றாண்டில், நமது நிலைமை என்ன? நாம் ஏன் அடிமை கொள்ளப்பட்டு, கொடுமைக்குள்ளாகி, நிலை குலைந்து நிற்கின்றோம். நம்மை இந்நிலைக்குக் கொணர்ந்தவை எவை? எவர்? நமது நிலைமையைச் சீர்தூக்கி, சமத்துவம் பெற்று, சரிநிகர் சமானமான வாழ்வெய்த ஏதேனும் வழியுண்டா என்பதை நிமிர்ந்து நோக்காமல் எங்கு உறக்கங் கொண்டிருக்கின்றீர்கள்? இங்ஙனமே உறங்கிக் கிடப்பீரேல் என்றுதான் விழிப்பீர்கள்? நித்திரையினின்று என்றுதான் எழுவீர்கள்? அந்தோ! அந்தோ!! சுதந்திரச் சூரியன் வெப்பமாய் காய்கின்றானே! சமத்துவத் தென்றல் இன்பமாய் வீசுகின்றதே! சமதர்ம இடிமுழக்கம் காதை செவிடுபடச் செய்கின்றதே! ‘விடுதலை, விடுதலை“ என்ற ஒலி எங்கும் தொனிக்கிறதே! இப்பேரிரைச்சலில் இந்திய சகோதரிகாள் எவ்வாறு உறங்குகிறீர்கள்? ஐயோ என்றுதான் விழிப்பீர்கள்? என்றுதான் விழிப்பீர்கள்?”.

இப்படிக் கூவி அழைத்தும் விழிக்காத பெண்களைப் பார்த்து உலக வரலாறுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி எழுச்சி பெறச்செய்தார் அன்னபூரணி அம்மையார்.

சுயமரியாதை இயக்கத்தை ‘தன்மான இயக்கம்’ என்றும் ‘தன் மதிப்பியக்கம்’ என்றும் தனது உரைகளில் குறிப்பிட்ட அன்னபூரணியாரின் திருமணமும் சுயமரியாதைத் திருமணம்தான். **‘தமிழர் தலைவர்’** என்ற நூலில் தமிழறிஞர் சாமி. சிதம்பரனார் அவர்கள் பட்டியலிட்ட தொடக்ககால, முதல்வரிசை, சுயமரியாதைத் திருமணங்களில் ‘அன்னபூரணி- ரத்தினசபாபதி’ இணையரின் திருமணமும் ஒன்றாகும்.

(வருவார்கள்...)

## விளம்பரக் குறியீடும் – திராவிடச் சாதனையும்...!

இந்திய மாநிலங்களில் வறுமை நீடிக்கும் மாநிலங்களான உத்தரப் பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான் மாநிலங்கள் வறுமையின் பிடியிலிருந்து மீண்டு வருவதாக நிதி ஆயோக் அமைப்புச் சமீபத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது. கடந்த 2015-16 ஆண்டுகளில் இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை 24.85 சதவிகிதமாக இருந்ததாகவும், அந்த எண்ணிக்கை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 9.89 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. உண்மையில், இந்த எண்ணிக்கையைக் காட்டிலும், நாட்டில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாகப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வறுமைக் கோட்டை கணக்கிடுவதற்கான முக்கிய அளவீடுகளில் தனிநபர் வருமானம், உடல்நலம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவை முதன்மையாக உள்ளன. பல்பரிமாண அளவுகளாக, குழந்தைத் திருமணம், தாய்சேய் நலம், குழந்தை மற்றும் இளம்பருவ இறப்பு உள்பட 12 குறியீடுகள் உள்ளன. ஆனால், ஒட்டுமொத்தமான கணக்கீட்டின் அடிப்படையிலான பல்பரிமாண வறுமைக் குறியீட்டை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.

இதன்மூலம், ‘ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் வறுமை ஒழிக்கப்பட்டுள்ளதாக நம்பமுடியாத அறிக்கையை வெளியிட்டுள்ளது’ என்ற விமர்சனம் எழுந்துள்ளது.ஒன்றிய பா. ஜ.க. ஆட்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு உருப்படியாக எந்தத் திட்டத்தையும் செய்து முடிக்கவில்லை. எல்லா திட்டங்களுமே வெறும் அறிவிப்புகள்தான். இந்த நிலையில், நிதி ஆயோக் அறிக்கை என்பது அரசின் விளம்பரத்துக்கு என விமர்சனம் எழுந்துள்ளது. அவர்கள் வெளியிட்ட குறியீடுதான் என்றாலும், அதில் தமிழ்நாட்டில் ஏழைகளின் எண்ணிக்கை அளவு என்பது வெறும் 2 சதவிகிதம்தான் என குறிப்பிட்டுள்ளது.. அதற்குக் காரணம் தமிழ்நாட்டுக் கட்டமைப்பு வலுவாக இருப்பதுதான். அதைச் சாதித்தது, திராவிடம்.

## :ப்ளாஷ்பேக்



### ஒப்படைக்கப்பட்ட கன்றுக்குட்டி!

2001-ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர் அன்றைய தளபதி அவர்கள் சென்னை மேயராக இருந்தபோது பொள்ளாச்சி பொதுக்கூட்டத்துக்கு வருகை தந்தார். அந்தக் காலகட்டத்தில் என் தந்தை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தார். ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு, தளபதியின் உரை கேட்கக் காத்திருந்தனர். அந்த நெரிசலில் 9 வயதுடைய நானும் என் தந்தையோடு தளபதிக்குப் பரிசளிக்க, கன்றுக்குட்டியுடன் மேடையேறினேன். கூட்டத்தில் என் தந்தை ஒதுங்கிக் கொண்டார். என் தந்தையின் நண்பர்கள் உதவியுடன் தளபதியின் கரங்களில் கன்றுக்குட்டியை ஒப்படைத்தேன். மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட தலைவர் தளபதியார், என்னைத் தோளில் தட்டிக் கொடுத்தார். இன்றைக்கு அதே இளைஞர் அணியில் நானும் பொறுப்பில் இருப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.



மணிமாறன் தென்றல்

**–மணிமாறன் தென்றல், துணை அமைப்பாளர், தி.மு.க. இளைஞர் அணி, கோவை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473

## கருவூலம்

### பெரியாரின் பாசம்

**1971-ஆம் ஆண்டு, சேலத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு வெள்ளிச் சிம்மாசனம் வழங்கும் விழா நடைபெற்றது. அந்த விழாவில் பங்கேற்றிருந்த முதலமைச்சர் கலைஞரின் கையைப் பிடித்து அழைத்து, தனக்கு அளித்த வெள்ளிச் சிம்மாசனத்தில் அமர வைத்து அழகு பார்த்தார் பெரியார். தந்தை பெரியார் அவர்கள் தனது உணர்ச்சிகளை எப்பொழுதும் யாரிடத்திலும் வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார். ஆனால், முத்தமிழறிஞர் கலைஞரிடத்தில் தனது பாசத்தை பல நேரங்களில் வெளிக்காட்டி இருக்கிறார். அதற்கு ஒரு சான்றாக அந்த நிகழ்வு அமைந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 197




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.